# ஹேப்பி வேலியின் கதை




என் பெயர் ஹேப்பி வேலி. நான் ஒரு சோலை. என்னிடம் ஒரு வற்றாத ஓடை இருந்தது. அப்பொழுது, நான் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருந்தேன்.




காலப்போக்கில் மனிதர்கள் என்னிடம் நெருங்கி வந்தனர். ஏனென்றால், நான் தூய்மையான ஒரு ஓடையின் உற்பத்தி இடம்.









"ஓ! நகர்ப்புறமயமாக்கலினால் அனைவருக்கும் தண்ணீர் கிடைப்பது குறைந்து கொண்டே போகிறதே!" என்று கோத்தகிரி பஞ்சாயத்து தலைவர் சிந்தித்தார்




கோத்தகிரி நகரத்திற்கு தண்ணீர் வழங்குவதற்காக, என்னுடன் என் நண்பர்களாகிய பெரிய சோலை மற்றும் ஈளடாவையும் சேர்த்து, குழாய் வழியாக நீரை எடுத்து வழங்க முடிவு செய்தனர்.




மக்கள் என்னை சுற்றியிருந்த காடுகளை வெட்டியபோது நான் வருத்தப்பட்டேன். மேலும், பண லாபத்திற்காக பல ஏக்கர் அளவில் தேயிலை வளத்தனர்.




பின்னர், பஞ்சாயத்து மற்றும் சமுதாய மக்களின் ஆதரவுடன் கீஸ்டோன் என் நண்பனாகி என்னை என் இயல்பான நிலைக்கருகில் கொண்டுவருவதற்கு ஒரு பகுதியில் சோலை மரக்கன்றுகளை நட்டு என்னை பாதுகாத்தனர்.




நான் சோலை வனத்தையும் என் மரங்களையும் திரும்பப் பெற்றுக்கொண்டு வருகிறேன். இப்போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். இப்பொழுது பறவைகள், பிற வனவிலங்குகள் வசிக்குமிடமாகவும், மக்களுக்கு தண்ணீரை எளிதில் வழங்கும் நிலையிலும் உள்ளேன்.




இப்போது, நான் திருப்தி கொள்கிறேன். "200 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நீர் வழங்குவதற்கான திறன் எனக்கு உள்ளது, ஒரு வறட்சி நிலவரம் இருக்கும்போதும் கூட என்னால் நிலையாக இருக்க முடிகிறது".

NILGIRIS WATER RESOURCE CENTER

Arghyam

Illustrations: Don Cruz Shelton

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.